## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 51/2014** **Date:04.08.2025**

**(PW1)- Deva Gnana Jose**

**4,5,6** ம் பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கண்டக்டர் வேலை செய்கிறேன். எனது மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் ஆசிரியராக வேலை செய்கிறார். நான் திமுக கட்சியில் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு அ பட்டிகை சொத்தின் புல எண் என்ன என்றால் 608 ஆகும். வழக்கு பி பட்டிகை சொத்தின் புல எண் என்ன என்றால் 608 ஆகும். வழக்கு அ பட்டிகை சொத்தின் எல்கை என்ன என்றால் மேற்கே நவீன் சொத்தும், கிழக்கே 4ம் பிரதிவாதியின் சொத்தும் , வடக்கே தேவராஜ் சொத்தும் , தெற்கே நெல்சன் சொத்தும் அமைந்துள்ளது.

**2.** வழக்கு பி பட்டிகை சொத்தின் எல்கை என்ன என்றால் கிழக்கே சாலையும், வடக்கே வர்கீஸ் சொத்தும் தெற்கே சுனீல் சொத்தும் மேற்கே என்னுடைய வீடும் அமைந்துள்ளது. வழக்கு அ பட்டிகை சொத்து செல்லையா நாடார் சொத்து என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்து யாருடையது என்றால் சுப்பையா நாடார் மகன் செல்வின் ராஜ், சாம்ராஜ், ஜிம்ஜான் ஆகியோருடையது. செல்லையா நாடார் எனக்கு என்ன உறவு என்றால் எனது அம்மாவின் அக்காளின் கணவர் ஆவார். மேற்படி செல்லையா நாடாருக்கு வாரிசு கிடையாதுஎ ன்றால் சரிதான்.

**3.** செல்லையா நாடார் எப்போது இறந்தார் என்றால் 08.07.1981ம் வருடம் இறந்து விட்டார். செல்லையா நாடாரின் மனைவி எப்போது இறந்தார் என்றால் 04.07.1981 ம் வருடத்தில் இறந்து விட்டார். மேற்படி இரண்டு நபர்களின் இறப்பு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, செல்லையா நாடார் இறப்பு சான்றிதழ் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். செல்லையா நாடாரின் மனைவியின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

**4.** செல்லையா நாடாரின் மனைவி இறக்கும் போது அவருக்கு வயது என்ன என்றால் 71 வயது ஆகும். செல்லையா நாடாரின் தந்தை பெயர் என்ன என்றால் யாக்கோபு நாடார் ஆவார். செல்லையா நாடாரின் அம்மா பெயர் என்ன என்றால் தெரியாது. செல்லையா நாடார் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் விவசாயம் செய்து வந்தார். செல்லையா நாடார் வகையரா பாகப்பிரிவினை செய்த சொத்து யாரிடமிருந்து கிரயம் பெற்றது என்றால் அது குடும்ப சொத்து ஆகும், யாரிடமிருந்தும் கிரயம் பெறப்படவில்லை.

**5.** செல்லையா நாடார் வகையரா பாகப்பிரிவினை செய்த போது செல்லையா நாடாரின் அப்பா உயிருடன் இருந்தாரா என்றால் உயிரோடில்லை. செல்லையா நாடாரின் பூர்வீகம் கோமான்விளை என்றால் சரிதான். செல்லையா நாடார் பாகப்பிரிவினை எந்த வருடம் செய்து கொண்டார்கள் என்றால் 1962ம் வருடம் செய்து கொண்டார்கள். வழக்கு அ பட்டிகை சொத்து எந்தெந்த சர்வே எண் என்றால் 608/17, 607/20 மற்றும் 607/21 , மேற்படி 3 சொத்து போக மற்றொரு சொத்து உண்டு, தற்போது ஞாபகமில்லை. செல்லையா நாடாரின் பூர்வீக ஊரில் உள்ள வீட்டில் எத்தனை வருடம் இருந்தார் என்றால் நான் பிறந்ததிலிருந்து அவர் இறக்கும் வரை அங்கு தான் இருந்தார் .

**6.** செல்லையா நாடாரின்வீட்டிற்கு பக்கத்தில் யாருடைய வீடு உள்ளது என்றால் ஜேசையாவின் வீடு, தேவராஜ் வீடு, நவீன் வீடு மற்றும் நெல்சன் வீடு உள்ளது. செல்லையா நாடாரின் வீட்டிற்கு வடமேற்கு பகுதியில் யாருடைய வீடு உள்ளது என்றால் தேவராஜ் வீடு உள்ளது. மேற்படி குறிப்பிட்டுள்ள அனைத்து வீட்டுகாரர்களுக்கும் வழக்கு பி பட்டிகை சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, பி பட்டிகை சொத்து எனக்கு உரிமைப்பட்டது. பிரதிவாதிகளுக்கு பி பட்டிகை சொத்து வழியாக தான் பாதை செல்கிறது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் நான் செல்லையன் நாடாரின் வளர்ப்பு மகன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**7.** எப்போது என்னை தத்தெடுத்தார்கள் என்றால் எனக்கு விவரம் தெரிந்த பருவத்திலிருந்து, சுமார் 5 வயதிலிருந்து அவரது வீட்டில் தான் உள்ளேன். என்னுடைய அப்பா பெயர் என்ன என்றால் ஜோசப் ராஜ். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 5 நபர்கள் ஆவர். நான் செல்லையன் நாடாரின் வளர்ப்பு மகன் என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், செல்லையா நாடார் எனக்கு எழுதி கொடுத்த தான பத்திரமாகும். செல்லையா நாடார் தமிழில் எழுதுவரா, மலையாளத்தில் எழுதுவாரா என்றால் அவருக்கு எழுத படிக்க தெரியாது. செல்லையா நாடார் கையொப்பமிடுவாரா என்றால் கையொப்பமிடுவார். செல்லையா நாடாரின் வகையராவின் பாகப்பிரிவினை பத்திரம் மலையாளத்தில் உள்ளது என்றால் சரிதான்.

**8.** எழுத படிக்க தெரியாத செல்லையா நாடார் மலையாளத்தில் எழுதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் தமிழில் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரியல்ல, தமிழில் கையொப்பம் செய்யவில்லை. நான் குறிப்பிட்டுள்ள உயில் ஆவணத்தில் தமிழில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 1 ஆவணத்தில் 2 ம் பக்கத்தில் உள்ள முதல் கையொப்பம் செல்லையா நாடாருடையது என்றால் சரியல்ல. எனக்கு எழுதி கொடுத்த வாசாஆ, 2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து செல்லையா நாடாருடையது என்றால் சரியல்ல.

**9.** மேற்படி 2 ஆவணங்களிலும் செல்லையா நாடார் கைநாட்டும், கைரேகையும் வைக்கவில்லையென்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.2 ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. செல்லையா நாடார் உயில் எழுதிய சமயத்தில் நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. செல்லையா நாடாருக்கு எழுத படிக்க தெரியாத போது எவ்வாறு தனியாக சென்று உயில் எழுதியிருப்பார் என்றால் சாட்சிகள் உடன் சென்றார். மேற்படி உயில் எழுதிய சமயத்தில் எனக்கு என்ன வயது என்றால் 26 வயது . செல்லையா நாடாரையும் அவரது மனைவியையும் நான்தான் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான்.

**10.** எந்த வருடத்தில் உயில் எழுதினார் என்றால் 08.07.1980 ம் வருடம் உயில் எழுதினார். நான் இந்த வழக்கை எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழிப்பாதை உரிமை கோரி தாக்கல் செய்துள்ளேன். செல்லையா நாடாரின் வகையரா ஆதியிலிருந்தே பி பட்டிகை சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தின் வழிப்பாதையானது செல்லையா நாடாரின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் வேறு நபர்களுக்கு உரிமையில்லையென்றாலும் செல்லையா நாடாருக்கு மட்டும் தான் வழிப்பாதை உரிமையுண்டு , அவருக்கு பின் எனக்கு மட்டும் உரிமை உண்டு. நான் கூறுவது போல் வாசாஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல.

**11.** செல்லையா நாடார் காலம் வரை பி பட்டிகை சொத்தில் எந்த வித பிரச்சனையுமின்றி பயன்படுத்தப்பட்டது என்றால் சரிதான். செல்லையா நாடாரின் மனைவியின் இறப்பில் என் மீது சந்தேகம் ஏற்பட்டதால் உண்டான வன்மத்தினால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்லையா நாடார் எனக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் செல்லையா நாடார் இறப்பதற்கு முன்னர் தெரியும். செல்லையா நாடார் இறக்கும் போது அவரது மனைவி ஆரோக்கியமாக இருந்தார் என்றால் சரிதான்.

**12.** மேற்படி செல்லையா நாடாரின் மனைவி அவர் இறந்த 43 நாட்களில் இறந்து விட்டார் என்றால் சரிதான். நான் வழக்கை தாக்கல் செய்யும் போது 4 அடி வழிப்பாதை என்று குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. பி பட்டிகை பாதையானது கான்கிரீட் சாலை யென்றால் சரியல்ல, தார் ரோடாகும். அது கான்கிரீட் ரோடு என்றாலும் அதை பிரதிவாதிகள் தான் அமைத்தார்கள் என்றாலும் சரியல்ல, அதில் நான் தான் கான்கிரீட் ரோடு போட்டேன். மேற்படி பாதை அமைப்பதற்கான செலவு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் கணக்கு பட்டியலில்லை, ஆனால் ரூ. 85,000 செலவாகியது. வழக்கு பி பட்டிகை சொத்து 2 அடி பாதை யென்றாலும் அதில் நான்

கேட்டு கொண்டதால் 1 அடி வைத்து 3 அடி பாதையாக கான்கிரீட் சாலை அமைத்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**13.** 2014 ல் நான் நெய்யூர் பஞ்சாயத்தில் தாவா சம்பந்தமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் பஞ்சாயத்துஅதிகாரிகள் இடத்தை பார்வையிட்டு 1ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யாமல் அவர் இடத்தில் வீடு கட்டுகிறார் என்று அனுமதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல, பஞ்சாயத்து அதிகாரிகள் எந்த அனுமதியும் கொடுக்கவில்லை, காவல்நிலையத்தில் தான் அவ்வாறு கூறினார்கள். காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யதுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்காக ஒரு பொய்யான புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்திலிருந்து சமாதானம் பேசிய பின்பு 1 அடி வழிப்பாதைக்கு அதிகமாக பெறுவதற்கு ரூ. 5 இலட்சம் 1 ம் பிரதிவாதிக்கு தருவதாக நான் ஒப்பு கொண்டேன் என்றால் சரியல்ல.

**14.** மேற்படி ரூ. 5 இலட்சத்தை தருவதிலிருந்து தப்புவிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் வீட்டிற்கு வடபுறம் ஒரு இடம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தின் எல்கை மால் என்ன என்றால் கிழக்கே ஜெயசேகரன் சொத்தும், மேற்கே தேவராஜ் சொத்தும், தெற்கே என்னுடைய சொத்தும், வடக்கே வர்கீஸ் சொத்தும் உள்ளது. வடக்கு பக்கம் சாலை உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது மேற்படி பாதை வழியாக தான் சென்று வருகிறேன் என்றாலும் , பி பட்டிகை சொத்தை தான் பாதையாக பயன்படுத்தவில்லையென்றாலும் சரியல்ல, பி பட்டிகை சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறேன்.

**15.** நான் செல்லையா நாடாரின் சட்டப்படியான வாரிசு இல்லையென்றாலும் போலியான ஆவணங்கள் மூலம் அவரது சொத்தை எனது பெயருக்கு உரிமை மாற்றம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாரிசின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு தான் செல்லையா நாடாரின் சொத்தின் உரிமை வரும் என்றால் சரியல்ல, அவருக்கு வாரிசு கிடையாது. செல்லையா நாடாரின் வீட்டை இடித்து நான்எப்போது புது வீடு கட்டினேன் என்றால் 2007ம் வருடம் கட்டினேன். நான் அவ்வாறு செல்லையா நாடாரின் வீட்டை இடித்து புதுப்பிக்கும்வரை பிரதிவாதிகளுக்கு எனது பெயரில் உள்ள ஆவணம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல, அனைவருக்கும் தெரியும்.

**16.** செல்லையா நாடார் இறப்பதற்கு 10 மாதத்திற்கு முன்பு எனக்கு உயில் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். செல்லையா நாடார் உயிலில் தனது வயது 73 என குறிப்பிட்டுள்ளார், ஆனால் அவரது இறப்பு சான்றிதழில் 72 வயது என குறிப்பிட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வழிப்பாதையை ஆக்கிரமித்து எந்த கட்டிடமும் கட்டவில்லையென்றால் சரியல்ல. எனக்கு 4 அடி வழிப்பாதை இருந்திருந்தால் 4 அடியில் கான்கிரீட் வழிப்பாதை அமைத்திருப்பேன், 2 அடியில் கான்கிரீட் வழிப்பாதை அமைத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல.

**17.** 4ம் பிரதிவாதி கேன்சரால் பாதிக்கப்பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் அவர்களை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்